**தூய சக்தி மற்றும் வலைப்பின்னல் வினைத்திறன் முன்னேற்ற செயற்திட்டம் - 2016**

தூய சக்தி மற்றும் வலைப்பின்னல் வினைத்திறன் முன்னேற்ற செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை மின்சார சபைக்கும் (சீஈபீ) மற்றும் நிலைபேறான எரிசக்தி அதிகாரசபைக்கும் (எஸ்ஈஏ) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடீபீ) இடையில் 2013 மே 08 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட எஸ்ஆர்ஐ 43576 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் 2.09(அ) ii பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின், மேற்குறிப்பிடப்பட்ட உடன்படிக்கையின் கீழ் ஏற்படுத்திக்கொண்ட 2013 மே 08 இன் 2892 எஸ்ஆர்ஐ மற்றும் 2893 எஸ்ஆர்ஐ இலக்க கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளது. இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் பகுதி 01 முதல் 06 வரையான பகுதிகளை அமுலாக்குவதற்கு பொறுப்பாக உள்ள அதேவேளை நிலைபேறான எரிசக்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் 07 ஆம் பகுதியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளின் அமுல்படுத்தலுக்கு பொறுப்பாக உள்ளது. செயற்திட்டத்தின் பகுதி 01 முதல் 06 வரையான பகுதியின் கீழ் இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. தூய மின்சக்தி வழங்கலை அதிகரித்தல் மற்றும் இலங்கையில் மின்சாரத்தை விநியோகிப்பதில் வினைத்திறனையும் நம்பகரத்தன்மையையும் முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 25,240 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 16,595.30 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 131.50 மில்லியன் அல்லது 66 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்குவதற்கு இணங்காணப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2013 செப்டெம்பர் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 யூன் 30 இல் பூர்த்தியாக்க வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், அதனைத் தொடர்ந்து செயற்திட்டத்தின் பூர்த்தியாக்குவதற்கான திகதி 2019 யூன் 30 வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய

கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட அத்தகைய செவ்வைகளையும் இப் பரிசோதனை உள்ளடக்கியிருந்தது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்.

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தினால் பேணப்பட்ட முன்னேற்ற நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்.

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் உதவி வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்.

(ஈ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்.

(உ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்.

(ஊ) செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்.

(எ) இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்.

(ஏ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை திருத்துவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கைகளில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு உடன்பாடுகளுடன் இணங்கப்பட்டுள்ளனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின்

பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை நிறுத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கிணக்கஞ்செய்யப்படாத மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிவாரி வளங்கல் திணைக்களத்தின் பதிவுகளின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து ரூபா 7,100.57 மில்லியன் தொகையான மொத்தக் கடன் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 6,968.53 மில்லியன் கூட்டுத்தொகை தொடர்புடைய கடன்களின் கிடைத்த தொகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மேலும், மீளாய்வாண்டின் போது ரூபா 5,014.12 மில்லியன் கூட்டுத்தொகையான கட்டணங்கள் மேற்கொள்ளப்பட்டு இலங்கை மின்சார சபை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கிடைத்த தொகையான ரூபா 5,013.68 மில்லியனுடன் இனங்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது நிதிகளின் பயன்பாடு மற்றும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினங்களுடன் தொடர்புடைய சில முக்கிய புள்ளிவபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் நிதியளிப்பதற்கு இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற் கான வருடாந்த மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஏடீபீ | 131.50 | 16,595.30 | 10,389.00 | 33.58 | 5,014.00 | 46.62 | 6,969.00 |
| ஜிஓஎஸ்எல் | 68.50 | 8,644.70 | 331.00 | - | - | - | - |
| சீஈபீ | - | - | 991.00 | 3.77 | 530.00 | 8.63 | 1,289.00 |
| **மொத்தம்** | **200.00** | **25,240.00** | **11,711.00** | **37.35** | **5,544.00** | **55.25** | **8,258.00** |

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்ட காலப்பகுதியின் 50 சதவீதம் கடந்த பின்னர் கடனின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட கிடைத்த தொகையின் 42 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையினால், மிகுதிக் காலப்பகுதியின் போது ஒதுக்கப்பட்ட கடனின் முழுமையான பயன்பாட்டின் சாத்தியக்கூறு ஐயத்திற்குரியதாகக் காணப்படுகின்றது.

### 3.2 பௌதீக செயல் முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு கிடைக்கக் கூடிய தகவலின் பிரகாரம், உட்கட்டமைப்பு பரிமாற்றத்திலான வலுப்படுத்தும் கூறின் கீழ் அநுராதபுரத்திலிருந்து வவுனியா வரை புதிய மின்சார பரிமாற்ற வழியின் நிர்மாண நோக்கத்திற்கு தள மதிப்பாய்வு மற்றும் கம்பிச்சட்ட துணை நிலையமுறையில் மண் புலனாய்வு, 52 மின்சார கோபுரங்களின் நிர்மாண வேலைகள் மற்றும் 372 மின்சார கோபுரங்களில், ஏனைய 169 கோபுரங்களின் அடித்தளமிடல் வேலைகள், நிர்மாணிப்பதற்கு பட்டியல்படுத்தப்பட்டதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(ஆ) பரிமாற்றம் மற்றும் விநியோக வலைப்பின்னலின் வினைத்திறன் முன்னேற்றத்தின் கீழ் கேகாலையிலுள்ள கம்பிச்சட்ட துணைநிலையத்தின் நிரிமாண வேலைகள், துல்ஹிரியயிலுள்ள கம்பிச்சட்ட துணைநிலையத்தின் வாதப் பிரதிவாதங்கள் மற்றும் பாதுக்கையிலிருந்து அத்துருகிரிய மற்றும் துல்ஹிரியலிருந்து கேகாலை வரை அமுல்ப்படுத்தப்பட்ட பரிமாற்ற வழிகளின் அபிவிருத்தி காணிக் கொள்வனவு மற்றும் நுழைவு வசதிகளிலுள்ள சர்ச்சைகள் காரணமாக இலக்குகள் பின்னடைந்திருந்தன.

(இ) எதிர்வினை சக்தி முகாமைத்துவ கூறின் கீழ் பன்னல, பொல்வத்த, பியகம மற்றும் ஹொரனயில் கம்பிச்சட்ட துணை நிலையங்கள் பிரேக்கர்ஸ் சுவிட்ச் இன் ஸ்தாபிப்புக்கு தொழிற்சாலை பரீட்சிப்பு மற்றும் பூர்வாங்க அங்கீகாரங்கள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னேற்றத்தில் இருந்த வேலை சபுகஸ்கந்தையிலுள்ள கம்பிச்சட்ட துணை நிலையத்தின் தொடர்புடைய வேலைகள் 2016 திசெம்பர் 31 இல் கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த உடன்படிக்கைகள் மற்றும் செயற்திட்ட நிர்வாகக் கையேட்டில் அவ்வாறான வகையில் பெறுகையினை மேற்கொள்வதற்கு ஏற்பாடு காணப்படாதிருந்த போதிலும், சிவில் வேலைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர்களினூடாக ரூபா 436.96 கிரயமொன்றில்

செயற்திட்டம் 47 வாகனங்களினை கொள்வனவு செய்திருந்தது. குறித்த வாகனங்கள் ரூபா 352.81 மில்லியன் கிரயமொன்றில் நேரடியாக இறக்குமதி செய்யக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், ரூபா 402.95 பெறுமதியான 45 வாகனங்கள் ஒப்பந்தங்களின் பெயரின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) கஹட்டகஸ்டிகிரிய, கெப்பற்றிகொல்லாவ, பொத்துவில், அக்கறைப்பற்று மற்றும் கிரிபத்கும்புற இல் வீடொன்று மாதமொன்றுக்கு ரூபா 350,000 விகிதத்தில் ஐந்து வீடுகளின் வாடகைக்கு ஒப்பந்தக்காரர்களிற்கு ரூபா 35.87 மில்லியன் கூட்டுத்தொகையான செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பிரதேசத்தில் நிலவும் நடைமுறை சந்தை விகிதத்துடன் அதிகப்படியானதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) செயற்திட்டத்தின் பதவியணியினரக்கு போக்குவரத்து வசதிகளினை வழங்குவதற்கு ஒப்பந்தக்காரர்களினூடாக கொள்வனவு செய்யப்பட்ட 11 வாகனங்களின் தள பொறியியலாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட பயணத்தாள்கள் மாதாந்த ஓட்ட அட்டவணைக்குப் பதிலாக உருவாக்கப்பட்டிருந்தது. அதன் விளைவொன்றாக, ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 40.73 மில்லியன் எரிபொருள் மற்றும் பேணுகை கிரயத்தினை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(ஈ) இலங்கை மின்சார சபையின் பொறியியளாளர்களுக்கு வழங்கப்பட்ட 08 கையடக்க தொலைபேசிகளின் அழைப்புக் கட்டணங்கள் மற்றும் மாதாந்த வாடகைகளினை சந்திக்க ஒப்பந்தக்காரருக்கு செயற்திட்டத்தினால் ரூபா 2.68 மில்லியன் கூட்டுத்தொகையான செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பற்றுச்சீட்டுக்களின் பற்றாக்குறை காரணமாக கணக்காய்வில் சான்றுறுதிப்படுத்த அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மை

பட்டியல்படுத்தப்பட்ட காலத்தில் ஈடுசெய்தல் கோரிக்கைகளினை சமர்ப்பிப்பதிலுள்ள தாமதங்கள் காரணமாக, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியளிப்பு முகவரினால் ரூபா 61.18 மில்லியன் தொகையான பொறுப்புக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது.